திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே, திருப்பத்தூர் வழியாக வருகின்ற பேருந்துகளில் எங்களைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் கூட ஏற முடியவில்லை. காரணம் அங்கே பஸ்களை நிறுத்தாமல் வந்து விடுகிறார்கள். இந்தக் குறையைப் போக்க, அங்குள்ள மக்கள் வசதியை முன்னிட்டு, புதிதாக அங்கிருந்து பேருந்து விட அரசு ஏற்பாடு செய்யுமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களை ஏற்றிக் கொள்ளாமல் செல்கிறார்கள் என்ற புகாரை எழுத்துமூலமாகக் கொடுத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம்.ஏ. லத்தீப் : தலைவரவர்களே, திருப்பத்தூரில் இருந்து புறப்படும் பேருந்துகள் அங்கிருந்து நேரடியாக சென்னைக்கு வருவதில்லை. வாணியம்பாடி, ஆம்பூர் வழியாக வருகின்றன. ஆகையால் அந்தப் பகுதிகளில் இருக்கிற மக்களுக்கும் அவர்களுடைய சௌகரியத்தை முன்னிட்டு பஸ்கள் விட்டால் நன்றாக இருக்கும். திருப்பத்தூரிலேயே பஸ் நிறைய பயணிகள் சேர்ந்துவிடுவதால் வாணியம்பாடி, ஆம்பூர், வேலூர் பயணிகள் ஏறுவதற்கு இடமில்லாமல் போய்விடுகிறது. ஆகவே, மேற்கொண்டு புதிய பேருந்துகள் விட ஏற்பாடு செய்யப்படுமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, ஏற்கனவே இதே கேள்விக்குப் பதில் அளித்ததைப்போல் இந்தக் கோரிக்கையை அரசு கவனமாகப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவு நேரப் பேருந்துகளில் கட்டணங்கள்

*வினா எண். 54—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரவு நேரங்களில் ஓடும் பஸ்களில் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றதா?

(ஆ) ஆம் எனில், அதைக் குறைக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, இரவு நேரங்களில் விடுகின்ற பேருந்துகள் சினிமாவுக்குச் சென்று திரும்புகின்றவர்களுக்குத்தான் வசதியாக இருக்கின்றன : தொழிற்

1980 பிப்ரவரி 5]

சாலைகளிலே வேலை செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்புகின்ற தொழிலாளர்களுக்கு வசதியாக இல்லை. சினிமாவுக்குச் செல்கிறவர்களுக்கு அதிக வசதி செய்து கொடுக்கும் இந்த அரசு அந்தக் கட்டணத்தைக் குறைக்க ஏற்பாடு செய்யுமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, இரவு நேரங்களிலே விடுகின்ற பஸ்கள் லாபகரமாக செயல்பட முடியாது என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். காரணம் இரவு நேரங்களில் அதிகமாகப் பயணிகள் பேருந்துகளில் செல்கின்ற வாய்ப்பு இல்லை. ஆகவேதான் கட்டணம் கொஞ்சம் கூட்டப்பட்டிருக்கிறது. செலவுகள் அதிகமாக இருப்பதால், பகலிலே ஓடுகின்ற பஸ்களில் உள்ள கட்டணத்தைப் போல் ஒன்றரை மடங்கு வசூல் செய்யப்படுகிறது. அந்தக் கட்டணத்தைக் குறைக்க எந்தவிதமான பரிசீலனையும் இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இரவு நேரங்களில் ஓடுகின்ற பேருந்துகளில் குறிப்பாக விரைவுப் பேருந்துகளில்—நான் அடிக்கடி இந்த அவையிலே சொல்வதைப்போல—ஜாக்கிகள் இருப்பதில்லை. ஸ்டெப்னிகள் சரியாக இருப்பதில்லை. அதனால் என்னென்ன இடையூறுகள் ஏற்பட்டன என்பதைப் பற்றி நான் தேதிவாரியாகக் குறிப்பிட்டு வைத்திருக்கிறேன். அவை இல்லாத காரணத்தால் சிறு தடங்கல் ஏற்பட்டாலும் பஸ்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டு விடுகின்றன. கட்டணம் அதிகமாக வசூல் செய்வது தவறு என்று நான் சொல்ல வரவில்லை. அப்படி வசூல் செய்யும்போது அவர்களுடைய பயணத்திற்கு இடையூறு இருக்கக் கூடாது. பழுதுபார்ப்பதற்காக ஜாக்கி வேண்டுமென்று திருவள்ளுவரை கேட்டால் பல்லவனுக்குத் தரமுடியாது என்கிறார்கள். அதைப்போல பல்லவன் "பெரியாரை" கேட்டால் பெரியார் கொடுக்க மறுக்கிறார். இப்படி..............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிட்டப்பா அவர்கள் இந்தக் கேள்வியை எப்படியாவது கேட்டு, பதில் பெற வேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். கேள்வி, பேருந்துகள் ஓடுவதில் ஏற்படுகின்ற தடங்கல்கள் பற்றியதல்ல; கட்டணம் அதிகமாக வசூல் செய்யப்படுவதைப் பற்றியது. அதை ஒட்டிக் கேளுங்கள்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்கள் மன்னிக்க வேண்டும். கட்டணம் அதிகமாக வசூல் செய்யப்படுகிறபோது இம்மாதிரி நடைபெறக் கூடாது என்பதற்காகச் சொன்னேன். இம்மாதிரி குறைகளைப் போக்க என்ன ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன?

(பதில் இல்லை)

திரு. கெ. சொக்கலிங்கம்: தலைவரவர்களே, இரவு நேரங்களில் பஸ் விடுவதாக அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தொழிற்சாலைகள் நிறைந்

[1980 பிப்ரவரி 5

திருக்கிற அம்பத்தூர், திருவொற்றியூர் பகுதிகளில் ஒழுங்காக பஸ்கள் ஓடுகின்றனவா? எத்தனை பஸ்கள் விடப்படுகின்றன என்பதைத் தெரிவிக்க இயலுமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, பல்லவன் பெருநகர் பிரிவில் 22 பேருந்து வழித்தடங்கள் இருக்கின்றன; 26 பேருந்துகள் விடப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம்: சார், நான் கேட்டது தொழிற் சாலைகள் நிறைந்த பகுதிகள் பற்றி. அதற்குச் சரியான பதில் வரவில்லை.

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, சென்னை போன்ற பெரிய நகரங்களில் ஜனங்கள் இரவு 12 மணி வரையில் போய் வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. தற்போது 10 1/2 மணி வரையில்தான் பஸ்கள் விடப்படுகின்றன; இரவு 12 மணி வரையில் பஸ்கள் விட ஏற்பாடு செய்யப்படுமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, இந்த யோசனையை அரசு பரிசீலிக்கும்.

[முற்பகல் 9-50]

திரு. என். கிட்டப்பா: பேரவைத் தலைவரவர்களே, நான் முன்பு கேட்டுக்கொண்டதற்கிணங்க மாண்புமிகு அமைச்சுச் செயலர் அவர்கள் அதற்கு பதிலளிக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, அக்கேள்வியினைத் திரும்பக் கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, நேரத்தை நான் வீணடிக்க விரும்பவில்லை. ஆகவே, மன்னிக்கக் கோருகிறேன். இரவு நேரங்களில் ஓடக்கூடிய பேருந்துகளில் குறிப்பாக ''பல்லவன்'', ''திருவள்ளுவர்'' போன்ற கழகங்களின் பேருந்துகளில் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுவதைப் பற்றி இங்கே கேள்வி வந்திருக்கிறது. அதையொட்டியே நானும் கேள்வி கேட்க விரும்புகிறேன். இந்தப் பேருந்துகளில் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுகிற அதே நேரத்தில் பல பேருந்துகளில் ஜாக்கிகள் இல்லை, ஸ்பானர்கள் இல்லை, ஸ்டெப்னி சரியாக இல்லை. நான் உண்மையைத்தான் சொல்கிறேன். தேதி வாரியாக குறித்து வைத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேதிவாரியாகக் குறித்து வைத்திருப்பதைப்பற்றியெல்லாம் இப்படி கேள்வியாகக் கேட்கக் கூடாது. அவற்றைப் புகாராகப் பிறகு கூறுங்கள்.

1980 பிப்ரவரி 5]

திரு. என். கிட்டப்பா : அதேநேரத்தில் திருவள்ளுவர் என்று ஒரு பெயரை இட்டு புதிதாகப் பேருந்து வழித்தடத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பேருந்துகளின் கட்டணம் பற்றிய கேள்விக்கு பதில் சொல்லுங்கள்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியைப் புரிந்துகொள்ளுகின்ற ஆற்றல் எனக்கு இல்லையோ என்று சந்தேகப்படுகிறேன். அவர்கள் பல கேள்விகளை ஒரே கேள்வியிலேயே கேட்கிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்த அளவுக்கு, புரிந்த அளவுக்கு பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்துப் பேருந்துகளில் கட்டணம் உயர்த்தப்படவில்லை. முன்பு பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தில் ''எக்ஸ்பிரஸ் பிரிவு'' என்று இருந்த பிரிவுதான் இவ்வாறு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகமாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, அதிலே எந்தவிதமான கட்டண மாற்றமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த காலங்களில் கிலோ மீட்டருக்கு 6 பைசா என்கிற கட்டணத்தைக் கூட இந்த அரசு 5 பைசாவாகக் குறைத்துத்தான் இருக்கிறது. அதே அளவு இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. இரவு நேரப் பேருந்துகளில் அதுவும் நகரப் பேருந்துகளில் மட்டும் தான் 1 1/2 மடங்குள கட்டணம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. ரூட் பேருந்துகளில் ஸ்டெப்னி சரியில்லை, ஸ்பானர்கள் இல்லை, ஜாக்கி இல்லை என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தமாதிரி குறைகள் எல்லாம் விரைவிலேயே நிவர்த்திக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்யாற்றின் குறுக்கே அணை.

* வினா எண் 55—திரு. தா. சாமிக்கண்ணு : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, குப்பநத்தத்தில் செய்யாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டமொன்று அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) செங்கம் தொகுதியில் செய்யாற்றின் குறுக்கே குப்பநத்தம் கிராமம் அருகே ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது. அதன் மதிப்பீடு 2 கோடியே 13 இலட்சம் ரூபாய்.

(ஆ) ஆய்வு முடிவுற்று, செயல்படுத்துவதற்கான சாத்திய கூறுகள்பற்றி அறிக்கை கிடைத்த பின்னர், அரசு முடிவு எடுக்கும்.